சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 98/2024

பெயர் திரு. பலராமன் நாள்.19.01.2026
த/பெ. மன்னத்தபிள்ளை

**<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்குச் சொத்திற்கு மேற்கே பிரதிவாதியின் தகப்பனார் அரிகிருஷ்ணன் என்பவருக்கு உரிமையான 1ஏக்கர் 31 சென்ட் சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை அரிகிருஷ்ணன் தனது மகன் பிரதிவாதிக்கு செட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த 1 ஏக்கர் 31 சென்ட்டில் 34 சென்ட் நிலத்தை பிரதிவாதி ஆடல் அரசு என்பவருக்கு விற்றுவிட்டார் என்றால் சரிதான். மீதமுள்ள 97 சென்ட் பிரதிவாதி பெயரில் புல எண். 116/1ஏ1 என்று உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த 97 சென்ட்டில் பிரதிவாதி கம்பி வேலி அமைத்துள்ளார் என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு அமைத்துள்ளார். அந்த வேலிக்குள் நான் உரிமை கோருகிறேனா என்றால் என் நிலமும் அதில் உள்ளது. அந்த வேலிக்குள் 4 சென்ட் எனக்கு உரிமையான சொத்து உள்ளது.

2) வழக்குச் சொத்தை அளப்பதற்கு வருவாய்த்துறையிடம் நான் மனு அளித்தேன். அவ்வாறு மனுவில் 4 சென்ட் நிலத்தை பிரதிவாதி அனுபவித்து வருவதாக நான் கூறவில்லை. வருவாய்த்துறையினர் அளக்க வரவில்லை என்பதால் நீதிப்பேராணை தாக்கல் செய்தேன் என்றாலும், அந்த நீதிப்பேராணையில் பிரதிவாதி தரப்பினர் அல்ல என்றாலும் சரிதான். அந்த நீதிப்பேராணையில் என் சொத்தை அளந்து கொடுக்கவேண்டும் என்று உத்தரவு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்பு வருவாய்த் துறையிடம்

உயர்நீதிமன்ற உத்தரவுப்படி அளக்கவேண்டும் என்று உத்தரவு அனுப்பினேன். வருவாய்த்துறைக்கு அனுப்பிய மனு நகல்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வருவாய்த் துறையினர் அளக்க வரவில்லை என்று நீதிமன்ற அவமதிப்பு வழக்கை அவர்கள் மீது தாக்கல் செய்யவில்லை. வழக்குச் சொத்தின் நான்கு எல்லைகளில் உள்ள சொத்துக்களை அளந்தால்தான் வழக்கு சொத்து எங்குள்ளது என்று தெரியவரும் என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் கிழக்கு மற்றும் தெற்கு எல்லையில் உள்ள நபர்கள் என் பங்காளிகள் என்றால் சரிதான்.

3) நில அளவையருக்கு நான் படி கட்டி அளந்தேன். அதனை சுமார் 10 வருடங்களுக்கு முன்பு அளந்தேன். நான் அளக்கும் பொழுது அந்த 4 செண்ட் நிலத்தை நான்தான் அனுபவம் செய்து வந்தேன். பிரதிவாதி ஆடல் அரசுக்கு சொத்தை விற்கும்பொழுது நில அளவையர் வைத்து அவருடைய சொத்தை அளந்தார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு தன் தகப்பனார் செட்டில்மென்ட் எழுதி கொடுக்கும் பொழுதும் சொத்துக்கள் அளக்கப்பட்டன என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி ஆடல்அரசுக்கு கிரயம் கொடுத்த பொழுது அளந்து அவர் சொத்துக்கு வேலி போட்டார் என்றால் வழக்கிற்கு பின்னிட்டுதான் அவ்வாறு வேலி போட்டார்.. அவ்வாறு வேலிபோட்டு நான்கு வருடங்கள் இருக்குமா என்றால் இரண்டு வருடங்கள்தான் இருக்கும். வழக்கு தாக்கல் செய்த பின்னர் 6 மாதங்கள் கழித்து பிரதிவாதி அவ்வாறு வேலி போட்டார். முதல் விசாரணையில் அவ்வாறு 6 மாதங்கள் கழித்து வேலி போட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) பிரதிவாதி அந்த வேலியை வழக்க தாக்கல் செய்வதற்கு நான்கு வருடங்களுக்கு முன்பே போட்டுவிட்டார் என்றால் அவருடைய சொத்திற்கு போட்டார். அதனால் நான் 4 வருடங்களுக்கு முன்பே ஆட்சேபனை செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. நீதிமன்றம் மூலம் சொத்தை அளக்க ஏற்பாடு

செய்யக் கூறி வழக்கறிஞரின் கூறியுள்ளேன். நீதிமன்றம் மூலம் அளந்தால் தான் பிரதிவாதி என்னுடைய நிலத்தில் 4 சென்ட் நிலத்தை சேர்த்து வேலி போட்ட விவரம் தெரியவரும் என்றால் சரிதான். பிரதிவாதி வழக்குச் சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும், அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யும் எண்ணமும் அவருக்கு இல்லை என்றாலும் சரியல்ல. வழக்குச் சொத்தை நான் அனுபவம் செய்து வருவதில் பிரதிவாதிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வருவாய்த் துறையில் 62 சென்ட்டிற்கு மட்டுமே பட்டா வழங்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

5) பட்டாவில் 4 சென்ட் குறைவாக உள்ளதை பிரதிவாதியின் சொத்தில் கேட்க இயலாது என்றால் சரியல்ல. வருவாய்த் துறையில் உள்ள பிரச்சனையை வைத்து பிரதிவாதி மீது தேவையில்லாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தின்மீது எவ்வித உரிமையும் கோரவில்லை. பிரதிவாதிக்கு எதிராக நான் தவறாக வழக்க தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கக் கூடியதல்ல என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை –இல்லை